**செப்டம்பர் – 26**

# TNPSC துளிகள்

- தேஜா ரியோ இயக்கிய நாகாலாந்தை மையமாகக் கொண்ட 'ஆங்' (Angh) திரைப்படம் 2026 ஆம் ஆண்டு டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் (TIFF) பிளாட்ஃபார்ம் விருதை வென்றது.
- ஜப்பானில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் 321 வது முறையாக சர்வதேச அளவில் பங்கேற்றதன் மூலம், இந்தியாவின் அதிக போட்டிகளில் விளையாடிய மகளிர் ஹாக்கி வீராங்கனை என்ற பெருமையை சவிதா புனியா பெற்றார்.
- ஜப்பானின் ஐச்சி-நகோயாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலப்பு தற்காப்புக் கலைகளில் (MMA) சுசிகா தரியால் வெண்கலப் பதக்கம் வென்று, கலப்பு தற்காப்புக் கலைகளில் இந்தியாவின் முதல் ஆசிய விளையாட்டுப் பதக்கத்தை வென்றவர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இந்தியா மற்றும் மங்கோலியா இடையேயான வருடாந்திர இருதரப்பு இராணுவப் பயிற்சியான நோமாடிக் எலிஃபண்ட் (NOMADIC ELEPHANT) பயிற்சியின் 18வது பதிப்பு உத்தரகண்ட் மாநிலத்தின் பித்தோராகரில் தொடங்கியது.
- சோவா-ரிக்பா மருந்தகங்கள் மற்றும் சூத்திரங்களை மேம்படுத்தவும், சோவா-ரிக்பா மருந்துகளின் தரநிலைகள், ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தர உத்தரவாதத்தை ஆதரிக்கவும் சோவா-ரிக்பா பணிக்குழுவின் முதல் கூட்டம் உத்தர பிரதேசத்தின் காசியாபாத்தில் நடைபெற்றது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் கெய் பன்யோர் மாவட்டத்தில் 'பெகோனியா நீலமோரம்' (Begonia neelamorum) என்ற புதிய பூக்கும் தாவர இனம் கண்டறியப் பட்டு உள்ளது.
  - இந்த இனத்திற்கு நிஷி சமூகத்தின் நீலம் குலத்தின் பெயரிடப்பட்டுள்ளது. மேலும் இது உள்நாட்டில் "கோபீர்ஹோபு பாப்ரை" என்று அழைக்கப்படுகிறது.
- சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக ஆண்டுதோறும் செப்டம்பர் 24 அன்று உலக கடல்சார் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "From Policy to Practice: Powering Maritime Excellence" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மேகதாது தீர்மானம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம்

- காவிரி ஆற்றின் குறுக்கே முன்மொழியப்பட்ட மேகதாது அணை தொடர்பான திருத்தப் பட்ட தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானத்தை எதிர்த்து தொடரப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- திருத்தத்தின் போது அவையில் இருந்தும் எதிர்ப்பு தெரிவிக்காத சட்டமன்ற உறுப்பினர்கள், பின்னர் தங்களது சொந்த மௌனத்தின் அடிப்படையில் அதனை எதிர்க்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- தமிழ்நாடு-கர்நாடகா மேகதாது பிரச்சனையை தீர்க்க தீர்ப்பாயம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தும் கோரிக்கை திருத்தப்பட்ட தீர்மானத்தில் இடம்பெற்றிருந்தது.

- திருத்தப்பட்ட தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டதாகவும், நடவடிக்கைகளின் போது மனுதாரர் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.
- நடைமுறை முறைகேடு என்ற அடிப்படையில் சட்டமன்ற நடவடிக்கைகளை நீதிமன்றம் ஆய்வு செய்வதை அரசியலமைப்பின் 212வது சரத்து வரம்பிற்கு உட்படுத்துகிறது.
- தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளின் 286வது விதி, அவையில் எழும் நடைமுறை தொடர்பான கேள்விகளை முடிவெடுக்கும் அதிகாரத்தை சபாநாயகருக்கு வழங்குகிறது.




## பதவி விலகிய சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து சென்னை உயர்நீதிமன்றம்

> **Madras High Court: Can't take legislative role to punish resigning MLAs**
>
> The Madras High Court has dismissed a plea seeking a five-year ban on legislators who voluntarily resign from contesting future elections, holding that such a law can be made only by the Legislature.

- பதவி விலகி, அதன் விளைவாக நடைபெறும் இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிடும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கக் கோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- இதுபோன்ற பதவி விலகல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து மீண்டும் போட்டியிடுவதைத் தடுக்க நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் சட்டம் இயற்ற வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.
- சட்டம் இல்லாமல் புதிய ஐந்து ஆண்டு தகுதியிழப்பை உருவாக்கவோ அல்லது இடைத்தேர்தல் செலவுகளை வசூலிக்கவோ இந்திய தேர்தல் ஆணையத்திற்கு (ECI)

அதிகாரம் இல்லை.

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 6 அன்று திட்டமிடப்பட்ட மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல்களை நிறுத்தவும் இம்மனு கோரியது, ஆனால் நீதிமன்றம் தடை விதிக்கவில்லை.
- தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் பதவி விலகி, பின்னர் நடைபெறும் இடைத்தேர்தலில் வேறு கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பிய சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்பான வழக்கு இதுவாகும்.
- அத்தகைய விதிகளுக்கு சட்டம் தேவைப்படும்போது, நீதிமன்றங்கள் நீதித்துறை உத்தரவுகள் மூலம் புதிய சட்டப்பூர்வக் கட்டுப்பாடுகளை உருவாக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# தேசியச் செய்திகள்

## டிஜிட்டல் தகவல் தொடர்பு ஆணையம்

- கிட்டத்தட்ட 37 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த டிஜிட்டல் தகவல் தொடர்பு ஆணையத்தை (DCC) இந்திய அரசு கலைத்தது.
- DCC முதலில் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொலைத்தொடர்பு ஆணையமாக நிறுவப்பட்டது மற்றும் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் DCC என மறுபெயரிடப் பட்டது.
- இது தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்பு கொள்கை மற்றும் நிர்வாக விஷயங்களுக்கான உச்சபட்ச துறைகளுக்கிடையேயான அமைப்பாக இருந்தது.
- மத்திய அமைச்சரவை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று இதனை கலைக்க ஒப்புதல் அளித்தது. மேலும் அரசு தீர்மானம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று நடைமுறைக்கு வந்தது.
- DCC உறுப்பினர்கள் மற்றும் தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆலோசகர்களுக்கு இடையிலான ஒன்றுபடுதல் மற்றும் முக்கியப் பணியிடங்கள் காலியாக இருந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## பன்முகத்தன்மைக்கான பங்குதாரர்கள் மாநாடு

- நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் (UNGA)

கூட்டத்தையொட்டி நடைபெற்ற பன்முகத்தன்மைக்கான பங்குதாரர்கள் (P4M) உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டது.

- P4M என்பது நடுத்தர சக்திகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் வளரும் நாடுகளின் கூட்டமைப்பாகும் என்பதோடு இது பன்முக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியம் (EU), பிரேசில், கனடா மற்றும் கென்யா ஆகியவை இதன் நிறுவனத் தொடக்க நாடுகளாகும்; இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் பார்படாஸ் ஆகியவை ஆரம்ப இணை ஆதரவாளர்களாகவும் பங்கேற்பாளர்களாகவும் இணைந்தன.
- பிரதிநிதித்துவம் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை (UN) மற்றும் உலகளாவிய நிதி நிறுவனங்களில் சீர்திருத்தங்களை இந்தக் குழு கோருகிறது.
- செயற்கை நுண்ணறிவு (AI), பருவநிலை மாற்றம், பெருந்தொற்றுகள், விநியோகச் சங்கிலிப் பின்னடைவு மற்றும் டிஜிட்டல் மாற்றம் போன்ற பொதுவான உலகளாவியப் பிரச்சினைகளில் இது கவனம் செலுத்துகிறது.




## உலகளாவிய பூச்சிக்கொல்லி ஆய்வு

- இத்தாலியின் ரோமில் நடைபெற்ற கூட்டத்தில், ரோட்டர்டாம் மாநாட்டின் வேதியியல் ஆய்வுக் குழு (CRC-22), மெத்தில் பாரத்தியான் என்ற பூச்சிக்கொல்லி தொடர்பான முடிவு வழிகாட்டுதல் ஆவணத்தை ஏற்றுக் கொண்டது.
- மெத்தில் பாரத்தியான் என்பது தானியங்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் பருத்தி போன்ற பயிர்களில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் ஆர்கனோ பாஸ்பரஸ் பூச்சிக்கொல்லியாகும்.
- இது மனிதர்கள், பறவைகள், தேனீக்கள் மற்றும் நீர்வாழ் விலங்குகளுக்கு அதிக நச்சுத் தன்மை வாய்ந்தது.
- பிரேசில் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) மெத்தில் பாரத்தியான் அடங்கிய பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டை ஏற்கனவே தடை செய்துள்ளன.
- இந்த வழிகாட்டுதல் ஆவணம் இறுதி முடிவுக்காக உறுப்பினர் நாடுகளின் மாநாட்டிற்கு (COP) அனுப்பப் பட்டுள்ளது; ஒப்புதல் அளிக்கப்பட்டால், சர்வதேச

வர்த்தகத்திற்கான முன் அறிவிக்கப்பட்ட ஒப்புதல் (PIC) நடைமுறையின் கீழ் மெத்தில் பாரத்தியான் கொண்டு வரப் படும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஹசாரிபாக் பிணந்தின்னிக் கழுகுகள் பாதுகாப்பு




- ஜார்க்கண்டின் ஹசாரிபாக், பிணந்தின்னிக் கழுகுகளுக்கான பாதுகாப்பான வாழ்விடமாக உருவாகி வருகிறது, இங்கு அவற்றின் வழக்கமான இருப்பு மற்றும் இயற்கையான இனப்பெருக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் காணப்படும் ஒன்பது பிணந்தின்னிக் கழுகு வகைகளில் வெண்முதுகுப் பிணந்தின்னிக் கழுகு, இந்தியப் பிணந்தின்னிக் கழுகு, மெல்லிய அலகுப் பிணந்தின்னிக் கழுகு, இமயமலை கிரிஃபான் மற்றும் எகிப்தியப் பிணந்தின்னிக் கழுகு ஆகிய ஐந்து ஹசாரிபாக்கில் காணப்படுகின்றன.
- ஜார்க்கண்ட் வனத்துறையானது ஹசாரிபாக்கில் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தை அமைக்க முன்மொழிந்துள்ளது.
- கடந்த முப்பது ஆண்டுகளில் இந்தியாவின் பிணந்தின்னி கழுகுகளின் எண்ணிக்கை

95% க்கும் மேலாகக் குறைந்துள்ளது, இதற்கு முக்கிய காரணம் கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்படும் சில ஸ்டீராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளின் (NSAIDs) நச்சு எச்சங்களாகும்.

- முன்மொழியப்பட்ட 100 கி.மீ பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு மண்டலம் ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக சுகாதார அமைப்பு-யுனிசெஃப் வாஷ் அறிக்கை

- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) ஆகியவை நீர், சுகாதாரம் மற்றும் தூய்மைக்கான (WASH) கூட்டுக் கண்காணிப்புத் திட்டத்தின் (JMP) கீழ் "பள்ளிகளில் குடிநீர், சுகாதாரம் மற்றும் தூய்மை குறித்த முன்னேற்றம் 2015-2025" என்ற அறிக்கையை வெளியிட்டன.
- வாஷ் (WASH) என்பது பாதுகாப்பான குடிநீர், மேம்பட்ட சுகாதார வசதிகள் மற்றும் அடிப்படை தூய்மை சேவைகளுக்கான அணுகலைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில், 429 மில்லியன் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு அடிப்படை குடிநீர், 460 மில்லியன் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதாரம் மற்றும் 362 மில்லியன் குழந்தைகளுக்கு அடிப்படை தூய்மை சேவைகள் பள்ளிகளில் இல்லை.
- இந்தியாவில், 2025 ஆம் ஆண்டில் 50 மில்லியன் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு பள்ளிகளில் எந்தவொரு சுகாதார சேவையும் இல்லை; 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் அடிப்படை குடிநீர் வழங்குவதற்கான பாதையில் உள்ள 62 நாடுகளில் இந்தியாவும் 28 நாடுகளில் ஒன்றாக உள்ளது.
- வாஷ் (WASH) திட்டம் ஆரோக்கியம் தொடர்பான நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) 3 மற்றும் நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான SDG 6 ஆகியவற்றை ஆதரிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## ஸ்வாமித்வா திட்டம் 2026

- ஸ்வாமித்வா அதிகார் அபிலேக் நிஸ்பாதன் ஏவம் பஞ்சியன் யோஜனா-2026 திட்டத்தின் கீழ் கிராமப்புற சொத்துக்களை இலவசமாக பதிவு செய்யும் முதல்

மாநிலமாக மத்தியப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.

- இத்திட்டம் சுமார் 50 லட்சம் கிராமப்புற சொத்துக்களை உள்ளடக்கியது மற்றும் கிராமப்புற மக்களுக்கு உரிமை ஆவணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சேவா சங்கல்ப் அபியானின் கீழ் மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் இத்திட்டம் தொடங்கப் பட்டது.
- 23,000 க்கும் மேற்பட்ட கிராமங்களில் இலவச பதிவு நடைபெற்று வருகிறது.
- இந்த முன்னெடுப்பு ஸ்வாமித்வா (SVAMITVA - கிராமங்களின் கணக்கெடுப்பு மற்றும் கிராமப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் வரைபடமாக்கல்) திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதோடு இது கிராமப்புறச் சொத்துக்களை வரைபடமாக்குவதற்கும் சொத்து ஆவணங்களுக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச சைகை மொழிகள் தினம் 2026 - செப்டம்பர் 23




- தேசிய சைகை மொழிகள் மூலம் செவித்திறன் குறைபாடுள்ளவர்களின் மனித உரிமைகளை அங்கீகரிப்பது, பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு உலக செவித்திறன் குறைபாடுடையோர் கூட்டமைப்பின் (WFD) 75வது ஆண்டு விழாவையும், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான மாநாட்டின்

(CRPD) 20 ஆண்டுகளையும் குறிக்கிறது.

- உலகளவில் 70 மில்லியனுக்கும் அதிகமான செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் வாழ்கின்றனர், இவர்கள் 300 க்கும் மேற்பட்ட வெவ்வேறு சைகை மொழிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- சர்வதேச செவித்திறன் குறைபாடுடையோர் வாரத்தின் ஒரு பகுதியாக இந்த நாள் முதன் முதலில் 2018 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Declaring Deaf People's Human Rights" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★